5. இத்தகராற்றின் விடயத்தையிட்டு அல்லது இதைச்சார்ந்த அல்லது தொடர்புற்ற அல்லது இதிலிருந்து எழுகின்ற அத்தகைய விடயங்களையிட்டு 1973 8.17 ந் திகதி, காலை, 9.00 மணிக்கு வெலிகமை கடற்றொழில் அலுவலகத்தில் ஒரு பகிரங்க விசாரணையொன்றை நடாத்துவேன்.

6. இத்தகராற்றின் விடயத்தையிட்டு அல்லது இதைச்சார்ந்த அல்லது தொடர்புற்ற அல்லது இதிலிருந்து எழுகின்ற அத்தகைய விடயங்களையிட்டு யான் பகிரங்க விசாரணையொன்றை நடாத்துவேன். இவ்விசாரணையில் சமூகமளிக்கவும், தத்தம் முறைப்பாட்டுக்குச் சாதகமாக வாய் மூலமோ எழுத்து மூலமோ சாட்சியமளிக்கவும் உரித்துடைய அனைவரும் தாமாகவோ, பிரிதிநிதி மூலமாகவோ, வழக்குரைப்போர் மூலமாகவோ, நியாயவாதி மூலமாகவோ பங்குறலாம்.

ஏ. டி. ஜே. குணவர்த்தன.

கொழும்பு, 1973.07.2.

7–459/2—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல 68

---

**நன்னடத்தைப் பாதுகாவல் அதிகாரிகள் நியமனம்**

இலங்கை அரசியல் அமைப்புச் சட்டத்தின் திருத்திய பதிப்பு 1956, 11வது புத்தகத்தின் 24 வது அத்தியாயத்தில் உள்ள நன்னடத்தைப் பாதுகாவல் குற்றவாளிகள் சட்டங்களின் 18 வது பிரிவின் 3 வது உப பிரிவுகளுக்கமைய, பின்வரும் நன்னடத்தைப் பாதுகாவல் அதிகாரிகள் கீழ்க்காணும் திகதியிலிருந்து அவர்களுடைய பெயர்களுக்கெதிரே காட்டப்பட்டிருக்கும் நன்னடத்தைப் பாதுகாவல் பிரிவுகட்கு நியமிக்கப்பட்டுள்ளனர் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

என். கே. ஏ. டி. சில்வா,
நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் நலன்கவனிப்புச்
சேவை ஆணையாளர்.

நன்னடத்தைப் பாதுகாவல் சிறுவர் நலன் கவனிப்புச்
சேவைத் திணைக்களம்,
த. பெ. இல. 546, கொழும்பு-1, 29.06.73

| | பெயர் | | பிரிவு | | திகதி |
|---|---|---|---|---|---|
| 1. | திரு. ஜே.ஏ. ஆர். சான்டஸ் | .. | பலப்பிட்டிய | .. | 05.04.73 |
| 2. | திரு. எம். ஏ. குணரத்தின | .. | பம்பலப்பிட்டிய | .. | 05.04.73 |
| 3. | திரு. என். டி. என். சந்திரசிரி | | அம்பாந்தோட்டை | .. | 01.06.73 |
| 4. | திரு. சி. சக்கரவத்தி | .. | கட்டன் | | 05.06.73 |

7–283—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

**அரசாங்க உத்தியோகத்தர்கள் நலன்புரி சங்க (இணைப்புச்) சட்டம்**

1971 இன் 27 ஆம் இல. அரசாங்க உத்தியோகத்தர்கள் நலன்புரி சங்க (இணைப்புச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் திறைசேரிச் செயலாளர் இலங்கைக் கணக்காளர் சேவையிலுள்ள திரு. ரி. சுந்தரராசா அவர்களை 1973 யூன் 28 ஆந் தேதி முதல் ஈராண்டு காலத்துக்குச் சங்கத்தின் முகாமைக் குழுவில் நியமித்துள்ளார்.

கொழும்பு, 1973 ம் ஆடு யூன் மீ 30 ந உ.

சி. ஏ. குறே,
திறைசேரிச் செயலாளர்.

7–404—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

**தன்னிச்சை நன்னடத்தைப் பாதுகாவல் உத்தியோகத்தர்**

அம்பாந்தோட்டை நீதிமுறைப் பிரிவு

1968 ம் ஆண்டு யூன் 21 ம் திகதி பிரசுரிக்கப்பட்ட 14,807 ம் வர்த்தமானி பிரகாரம் அம்பாந்தோட்டை நீதி முறைப்பிரிவுக்கு தன்னிச்சை நன்னடத்தைப் பாதுகாவல் உத்தியோகத்தராக சமூகசேவை கௌரவ அமைச்சரினால் நியமனம் செய்யப்பட்ட திருமதி ஜி. எம். டேல் நியமனம் (திருத்தப்பட்ட 1956) இலங்கை சட்டவாக்குகளின் 24 ம் அத்தியாயத்தின் 17 (2) ம் பாதுகாவல் நன்னடத்தைக் குற்றச் சாட்டின் II ம் பிரிவின் சட்டத்தின்கீழ் 1973.07.01 ம் திகதி தொடக்கம் ரத்துச் செய்யப்பட்டது என்று அறிவிக்கப்படுகிறது.

என். கெ. ஏ. தி. சில்வா,
நல்லொழுக்க விசாரணை சிறுவர் பரிபாலன சேவை ஆணையாளர்.

நல்லொழுக்க விசாரணை சிறுவர் பரிபாலன சேவை திணைக்களம்,
103 1/1 சதம் வீதி,
கொழும்பு,
1973 ம் ஆண்டு யூன் மீ 30 ந உ.

7–256—13.07.73 ந திகதிய வர்த்தமானி இல. 68

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

உணவு விலைக்கட்டளைகளை இல. : ஜீ 4/1973

**விலைக் கட்டளைகள்** — **கோதுமை மா**

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (173 ம் அத்தியாயம்) 3 (2) ம் பிரிவுடன் இணைந்து செயல்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கியைய காலி மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவும் நானாவிதப் பொருட்களும்) ஹென்றி விஜேதிலக்க ஆகிய நான் இந்தக் கட்டளையால்—

(1) 1973 ம் ஆண்டு மாச்சு மாதம் 02 ந் திகதியைக்கொண்ட 49 ம் இலக்க இலங்கை அதிவிசேட வர்த்தமானியில் 1973 ம் ஆண்டு மாச்சு மாதம் 02 ம் திகதியைக்கொண்டதும் ஜீ. 2 ம் இலக்கம் கொண்டதுமான உணவு விலைக் கட்டளையை உடனடியாக ரத்துச் செய்கின்றேன்.

(2) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் இத்திகதி முதல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இரண்டாம் அட்டவணையின் முதலாம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள, காலி பரிபாலன மாவட்டத்தினுள் அமைந்துள்ள ஒவ்வொரு பிரதேசங்களிலும் மொத்த வியாபாரி ஒருவரினால் விற்கப்படும் பொழுது நிகர பாரம் இருத்தல் 148 ஐ விற்கக்கூடிய ஆகக்கூடிய விலை இரண்டாம் அட்டவணையின் இரண்டாம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விலையாகும் என்பதை இக்கட்டளையால் நியமிக்கின்றேன்.

(3) மொத்தமாக விற்கப்படும், 148 இருத்தலுக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ உற்ற கோதுமை மாவின் மொத்த விற்பனவு விலை, 2 ம் அட்டவணையின் 2 ம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள 148 நிகர இருத்தலின் மிகக்கூடிய விலையின் பரிமாண வீதப்படி கணக்கிடப்பட்ட விலைக்கு மேலாகக்கூடாது என்றும் உத்தரவிடுகிறேன்.

(4) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள “ கோதுமை மா ” எனப்படுவது சோளம் மாவின் எந்தக் கலவையையும் உட்படுத்துவதாகும் என்றும்,

(ஆ) ஒரு நிகர அந்தர் அல்லது அதற்கு அதிகமான அளவு மாவை ஒரே நேரத்தில் விற்றல் அல்லது எந்த அளவு கோதுமை மாவையும் திருப்பி விற்பதற்காக விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படவேண்டும் என்றும்,

(இ) ஒரு நிகர அந்தரிலும் குறைந்த தொகை கோதுமை மாவைப் பாவிப்புக்கு அல்லது உபயோகத்திற்கென விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படவேண்டும் என்றும் பணிக்கின்றேன்.

(5) இந்தக் கட்டளையால் மிகக் கூடுதலான விலை நியமிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் சோளம் மா தவிர்ந்த வேறு எந்தப் பொருளாவது கலக்கப்பட்ட கோதுமை மாவை விற்கப்படாது எனவும் கட்டளையிடுகிறேன்.

(6) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்ட எந்த இடத்திலும் தம்வசம் அல்லது தமது கட்டுப்பாட்டின்கீழ் எவ்விடத்திலாவது அல்லது எவ்வாகனத்திலாவது கோதுமை மாவை வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் பொருத்தமான ஒரு கொள்கலத்தில் ஒரு அளவான மாவைப் பார்வைக்கு வைப்பதோடு இக்கட்டளையின்படி விதிக்கப்பட்டுள்ள மிகக்கூடுதலான விலையைக் குறிக்கும் ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத இலக்கங்களைக்கொண்ட விலை விபரப் பட்டியல் அல்லது ஒட்டுச்சீட்டு ஒன்றை அந்தக் கொள்கலத்தோடு இணைத்து வைப்பதோடு, மாவும் விலைகளும் நுகர்வோரின் பார்வைக்கு நன்கு துலங்க வைக்க வேண்டும் எனவும் பணிக்கிறேன்.

(7) இக்கட்டளையின்படி “ இருத்தல் ” அல்லது “ இரு. ” என்பது அவோர்டுபோஸ் நிறுத்தலளவை முறையின் பிரமாண நிறையாகக் கருதப்பட வேண்டுமெனவும் பணிக்கிறேன்.

(8) இக்கட்டளையின்படி ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் கோதுமை மாவை மொத்தமாகவோ சில்லறையாகவோ விற்பனை செய்யும் ஒவ்வொரு வியாபாரியும் அப்பொருளை நுகர்வோர் கோருமிடத்து பின்வரும் விபரங்களைக் கொண்ட ஒரு பற்றுச்சீட்டு வழங்க வேண்டும் என்று கட்டளையிடுகிறேன்—

(அ) விற்பனை நடந்த திகதி,

(ஆ) விற்ற பொருளின் அளவு (நிறையில்),

(இ) விற்ற அளவுக்குக் கொடுக்கப்பட்ட விலை (யும்),

(ஈ) எவ்விதமான விற்பனை, மொத்தமாகவோ, சில்லறையாகவோ என்பதும்.

(9) இக்கட்டளைக்கமைய, கோதுமை மா விற்கப்படும்போது விதிக்கப்பட்ட ஆகக் கூடுதலான விலை, சுற்றிக்கொடுக்கும் உறையின் அல்லது கொள்கலத்தின் விலையையும் உள்ளடக்கும் எனவும் உத்தரவிடுகிறேன்.

1973 ம் ஆண்டு யூன் மாதம் 01 ந் திகதி காலிக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

எச். விஜேதிலக்க,
காலி மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி,
(உணவும் நானாவிதப் பொருட்களும்).

## முதலாம் அட்டவணை

விபரமும் தரமும் — கோதுமை மா

## இரண்டாம் அட்டவணை

| பந்தி 1<br>பகுதி | பந்தி 2<br>148 நிகர இறுத்தலுக்கான மிகக்கூடிய மொத்த விற்பனவு விலை<br>ரூ. ச. | பந்தி 3<br>ஒரு நிகர இறுத்தலுக்கான மிகக்கூடிய சில்லறை விற்பனவு விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| காலி மாநகரசபையும் நான்கு சிறவெட்டுகளும், அக்மீமன கிராமச்சபை, போப்பே கிராமச்சபை, போத்தல கிராமச்சபைப் பகுதிகள் | 71 48 | 49½ |
| அம்பலாங்கொட நகரசபை, மாதம்பெ கிராமச்சபைப் பகுதிகள் | 71 69 | 49½ |
| வத்துகெதற பட்டினசபை, கறந்தெனிய கிராமச்சபைப் பகுதிகள் | 71 75 | 49½ |
| பட்டபொல கிராமசபை, வேரகொட கிராமச்சபைப் பகுதிகள் | 71 69 | 49½ |
| அஹுங்கம பட்டினசபை, கத்தளுவ கிராமசபை கஹந்த நாகந்த கிராமசபை, பிலான மெட்டறம்ப கிராம சபை, பறகொட கிராமசபைப் பகுதிகள் | 71 77 | 50 |
| ஹபருதுவ கிராமச்சபைப் பகுதி (மெலகொட கிராம சேவையாளர் பகுதி தவிர்ந்த) | 71 56 | 50 |
| மெலகொட கிராம சேவையாளர் பகுதி | 71 53 | 50 |
| கோதாகொட கிராமச்சபைப்பகுதி, பொல்பாகொட கிராமச்சபைப் பகுதிகள் | 71 77 | 50 |
| கொட்டவ கிராமச்சபைப் பகுதி | 71 80 | 50 |
| பத்தேகம கிராமசபை, வந்துறம்ப கிராமசபை, தெலிக்கட—மாஜுவான கிராமச்சபைப் பகுதிகள் | 71 67 | 49½ |
| பிட்டிகல—வைஹேன கிராமசபைப் பகுதி (பிட்டிகல கிராம சேவையாளர் பகுதி தவிர்ந்த) | 72 04 | 50 |
| பிட்டிகல கிராம சேவையாளர் பகுதி | 71 41 | 49½ |
| போத்திவெல—நியாகம கிராமசபை, வெலிவிட்டிய—திவித்துற கிராமச்சபைப் பகுதிகள் | 72 04 | 50 |
| தொடந்துவ பட்டினசபை, ரத்கம கிராமசபைப் பகுதிகள் | 71 42 | 49½ |
| ஹிக்கடுவ பட்டினசபை, தொட்டகமுவ—திராணகம கிராமசபை, கோனப்பினுவல—மீட்டியாகொட கிராம சபைப் பகுதிகள் | 71 48 | 49½ |
| பலப்பிட்டிய பட்டினசபை பகுதி | 71 77 | 50 |
| ஊறகஸ்மன்ஹந்திய கிராமசபை, பஹலகம்ஹெய கிராமச்சபைப் பகுதிகள் | 71 95 | 50 |
| கொஸ்கொட கிராமசபைப் பகுதி | 71 83 | 50 |
| பெந்தொட்ட பட்டினசபை, இந்துறுவ கிராமசபைப் பகுதிகள் | 71 98 | 50 |
| எல்பிட்டிய பட்டினசபை, கொளுவாமுல்ல—ஓமத்த கிராமசபை, அம்பண—பினிகஹனை கிராம சபைப் பகுதிகள் | 71 30 | 49½ |
| நாகொட—மாப்பழகம கிராமசபை, உடுகம கிராமசபை, யட்டலமத்த கிராமசபைப் பகுதிகள் | 71 94 | 50 |
| ஹினிதும கிராமசபை, ஒப்பாத்த கிராமசபை, நெலுவ கிராமசபை, நெல்லவ கிராம சபைப்பகுதிகள் | 71 22 | 50 |

**குறிப்பு.**—இதில் குறிப்பிட்டுள்ள விலைகள் கோதுமை மா விற்கப்படவேண்டிய விதிக்கப்பட்ட விலைகளல்ல. இதில்காணும் **மிகக்கூடிய** விலைக்குமேல் இப்பொருள் விற்கப்படக்கூடாது.

7–488/1—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

விலைக் கட்டளை இல. : ஜீ. 5/1973. **பாண்**

### விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (173 ம் அத்தியாயம்) 3 (2) ம் பிரிவுகளுடன் இணைந்து செயல்படும் 4 ம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள தத்துவங்களுக்கியைய காலி மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவும் நானாவித பொருட்களும்) ஹென்றி விஜேதிலக்க ஆகிய நான் இந்தக் கட்டளையால்—

(1) 1973 ம் ஆண்டு மாச்சு மாதம் 02 ந் தேதியைக்கொண்ட 49 ம் இலக்க இலங்கை அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் 1973 ம் ஆண்டு திகதியிடப்பட்டதும் ஜீ. 3 ம் இலக்கம் கொண்டதுமான உணவு விலைக் கட்டளையை உடனடியாக ரத்துச் செய்கிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம் 3 ம் பந்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே, 16 அவுன்ஸைக்கொண்ட பாணையோ 8 அவுன்ஸ் நிறையைக்கொண்ட பாணையோ 1 ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பிரதேசத்தில் விற்கக்கூடிய மிக அதிகவிலையாகவும் விதிக்கிறேன்.

(3) இக்கட்டளைக்கமைய 8 அவுன்ஸுக்கு மேலான நிறையைக்கொண்ட ஒரு பாணையோ அல்லது 8 அவுன்ஸுக்கு அதிகமான நிறையைக்கொண்ட ஒரு பாணின் பகுதியையோ குறிப்பிட்ட பிரதேசத்தின் எப்பகுதியிலாவது விற்குமிடத்து 16 அவுன்ஸ் பாணுக்கு விதிக்கப்பட்ட மிக அதிக விலையின் பரிமாண வீதப்படி கணக்கிடப்பட்ட விலைக்கே விற்கவேண்டுமெனவும் நியமிக்கிறேன்.

(4) இக்கட்டளைக்கமைய 8 அவுன்ஸ் நிறையை அல்லது 8 அவுன்ஸுக்கு மேலாகாத நிறையைக்கொண்ட பாணின் ஒரு பகுதியை இப்பிரதேசத்தின் எப்பகுதியிலாவது 8 அவுன்ஸ் பாணின் மிக அதிக விலையின் பரிமாண வீதப்படி கணக்கிடப்பட்ட விலைக்கு மேலாக விற்கக்கூடாது எனவும் உத்தரவிடுகிறேன்.

(5) இக்கட்டளைக்கமைய, விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் உறைகளின் விலையும், பாணின் மிக அதிக விலையுள் அடங்கும் எனவும் விதிக்கிறேன்.

(6) இக்கட்டளைக்கமைய மிக அதிகவிலை விதிக்கப்பட்டுள்ள எந்தப்பகுதியிலும் தம்வசம் பாண் வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும், விற்பனை நிலையத்தில் அவ்வப்பிரதேசத்திற்கென விதிக்கப்பட்டுள்ள மிக அதிகவிலையை நுகர்வோரின் பார்வைக்காக வைக்க வேண்டுமெனவும் உத்தரவிடுகிறேன்.

(7) இக்கட்டளைக்கமைய மிக அதிக விலைகள் விதிக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் பாண் விற்பனைசெய்யும் ஒவ்வொருவரும், நுகர்வோர் கோருமிடத்து, அன்னாருக்குப் பின்வரும் விபரங்களைக் குறிப்பிடும் பற்றுச்சீட்டு வழங்கவேண்டுமெனவும் உத்தரவிடுகிறேன்—

- (அ) விற்பனை நிகழ்ந்த திகதி ;
- (ஆ) விற்ற பாணின் விபரம் ;
- (இ) விற்ற பாணின் அளவு (ம்) ,
- (ஈ) விற்ற பாணுக்குச் செலுத்தப்பட்ட விலை (யும்).

(8) இக்கட்டளைக்கமைய "அவுன்ஸ்" அல்லது "அவு." என்பது அவோர்டுபோஸ் நிறுத்தலளவை முறையின் பிரமாண நிறையாகக் கருதப்படவேண்டும் எனவும் விதிக்கிறேன்.

1973 ம் ஆண்டு யூன் மாதம் 01 ந் திகதி முற்பகல் 10 மணிக்கு காலியில் கையொப்பமிடப்பட்டது.

எச். விஜேதிலக்க,
காலி மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி,
(உணவும் நானாவித பொருட்களும்).

அட்டவணை

| பத்தி 1<br>பகுதி | பத்தி 2<br>8 அவுன்ஸுக்கு அதிகமான பாணின் ஆகக் கூடியவிலை<br>ரூ. ச.<br>(16 அவுன்ஸுக்கு) | பத்தி 3<br>8 அவுன்ஸும் அதற்குக் குறைவான நிறையுமுள்ள பாணின் ஆகக்கூடியவிலை<br>ரூ. ச.<br>(8 அவுன்ஸுக்கு) |
|---|---|---|
| காலி மாவட்டம் .. .. .. .. | 48 .. | 25 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே குறிப்பிட்டுள்ள பாண் விற்கப்படவேண்டிய விதிக்கப்பட்ட விலைகளல்ல. இவ்வாகக்கூடிய விலைகளுக்குமேல் இப்பொருட்கள் விற்கப்படக்கூடாது.

7-488/2—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

இல. 444

1970 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (விசேட ஏற்பாடுகள்) கட்டளைச் சட்டம்

2 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1970 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (விசேட ஏற்பாடுகள்) கட்டளைச் சட்டத்தின் 2 (1) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப் பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, கூட்டுறவு ஆக்க ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமாகிய இராசகுரு பண்டார இராசகுரு ஆகிய நான், இதிலுள்ள முதலாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சங்கங்களை ("இணைக்கப்படும் சங்கங்கள்" எனக் குறிக்கப்பட்டவை) இதிலுள்ள இரண்டாவது அட்டவணையில் குறிக்கப்பட்டிருக்கும் சங்கத்துடன் ("பிரதான சங்கம்" எனக் குறிக்கப்பட்டிருப்பது) 1973.07.22 தொடக்கம் இக்கட்டளை மூலம் இணைக்கிறேன்.

ஆர். பி. இராசகுரு,
கூட்டுறவு ஆக்க ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்.

கொழும்பு,
1973 ம் ஆடு யூலை மீ 05 ந் உ.

முதலாவது அட்டவணை

இணைக்கப்படும் சங்கங்கள்

| சங்கத்தின் பெயர் | பதிவு இலக்கம் | பதிவுத் திகதி |
|---|---|---|
| 1. மட்டுப்படுத்தப்பட்ட அரிப்பு பாத்திமா கடற்றொழிலாளர் உற்பத்தி–விற்பனவு கூட்டுறவுச் சங்கம் .. | எம். என். 50 .. | 1959.06.17 |
| 2. மட்டுப்படுத்தப்பட்ட முள்ளிக்குளம் கடற்றொழிலாளர் உற்பத்தி–விற்பனவு கூட்டுறவுச் சங்கம் .. | எம். என். 57 .. | 1959.11.10 |

இரண்டாவது அட்டவணை

பிரதான சங்கம்

| சங்கத்தின் பெயர் | பதிவு இலக்கம் | பதிவுத் திகதி |
|---|---|---|
| 1. மட்டுப்படுத்தப்பட்ட முசலிப் பகுதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் .. .. .. | மண். 139 .. | 1972.04.03 |

7/454/1—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

இல. 443

1970 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (விசேட ஏற்பாடுகள்) கட்டளைச் சட்டம்

2 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1970 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (விசேட ஏற்பாடுகள்) கட்டளைச் சட்டத்தின் 2 (1) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப் பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, கூட்டுறவு ஆக்க ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமாகிய இராசகுரு பண்டார இராசகுரு ஆகிய நான், இதிலுள்ள முதலாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சங்கங்களை ("இணைக்கப்படும் சங்கங்கள்" எனக் குறிக்கப்பட்டவை) இதிலுள்ள இரண்டாவது அட்டவணையில் குறிக்கப்பட்டிருக்கும் சங்கத்துடன் ("பிரதான சங்கம்" எனக் குறிக்கப்பட்டிருப்பது) 1973.07.22 தொடக்கம் இக்கட்டளை மூலம் இணைக்கிறேன்.

ஆர். பி. இராசகுரு,
கூட்டுறவு ஆக்க ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்.

கொழும்பு,
1973 ம் ஆடு யூலை மீ 05 ந் உ.

முதலாவது அட்டவணை

இணைக்கப்படும் சங்கங்கள்

| | சங்கத்தின் பெயர் | பதிவு இலக்கம் | பதிவுத் திகதி |
|---|---|---|---|
| 1. | மட்டுப்படுத்தப்பட்ட உத்தரவாதமுடைய களுவன்கேணி ஆதவன் கூட்டுறவு கடல் தொழில் சங்கம் .. | பிசி.99 .. | 1964.04.29 |
| 2. | மட்டுப்படுத்தப்பட்ட உத்தரவாதமுடைய புன்னைக்குடா கடல் தொழிலாளர் கூட்டுறவு கடனுதவு விற்பனவுச் சங்கம் .. .. .. .. .. .. | மட.135 .. | 1971.05.31 |

இரண்டாவது அட்டவணை

பிரதான சங்கம்

| | சங்கத்தின் பெயர் | பதிவு இலக்கம் | பதிவுத் திகதி |
|---|---|---|---|
| 1. | மட்டுப்படுத்தப்பட்ட உத்தரவாதமுடைய வாழைச்சேனை ஏறாவூர்பற்று மீனவர் கூட்டுறவுச் சங்கம் .. .. | மட.141 .. | 1972.02.17 |

7-454/2 —13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

**திருக்கோணமலை மாவட்டத்தின் மூதூர் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட கிராமசேவகர் பகுதிகளைத் திருத்தியமைத்தல்**

1971 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் தேதி முதல் திருக்கோணமலை நிர்வாக மாவட்டத்தின் மூதூர் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவுக்குட்பட்ட தோப்பூர் கிராமசேவகர் பகுதி—தோப்பூர், அல்லைநகர் எனப் பெயர்கொண்ட இரு கிராமசேவகப் பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்று இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. 1971 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதியின் 14,972 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் இது சம்பந்தமாக பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றது.

(அ) இல. 216—தோப்பூர் கிராமசேவகப் பகுதியில் பின்வரும் கிராமங்கள் அடங்கும் :—

(1) தோப்பூர் (2) கள்ளம்பத்தை (3) பாலத்தோப்பூர் (4) கூர்கண்டம் (5) கிளிவெட்டி (6) பாரதிபுரம் (எல். பி. 4).

(ஆ) இல. 216எ—அல்லைநகர் கிராமசேவகப் பகுதியில் பின்வரும் கிராமங்கள் அடங்கும் :—

(1) அல்லைநகர், (2) நாவற்கேணிச்சேனை, (3) ஆரைப்பற்றைச்சேனை.

2. இப்புதிய கிராமசேவகப் பிரிவுகளில் நீதிபரிபாலனம் செலுத்தும் மஜிஸ்ரேட் நீதிமன்று, கிராமநீதிமன்றுகள், பொலிஸ் நிலையங்கள் என்பனவும் இப்பிரிவுகளுக்குரிய பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் பகுதி, உள்ளூர் அதிகாரசபைகள், தேர்தல் தொகுதி ஆகியனவும் பொது மக்கள் தகவலுக்காக கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| கி. சே. பிரிவு இல. | மஜிஸ்ரேட் நீதிமன்று | கிராமநீதி மன்று | பொலிஸ் நிலையம் | பிறப்பு, இறப்பு, விவாக பதிவாளர் பகுதி | உள்ளூர் அதிகார சபை | தேர்தல் தொகுதி |
|---|---|---|---|---|---|---|
| தோப்பூர் இல. 216 .. | திருக்கோணமலை.. | தோப்பூர் | மூதூர் .. | தோப்பூர் .. | தோப்பூர் .. | மூதூர் |
| அல்லைநகர் இல. 216 எ .. | திருக்கோணமலை.. | தோப்பூர் | மூதூர் .. | தோப்பூர் .. | தோப்பூர் .. | மூதூர் |

திஸ்ஸ தேவேந்திரா,
அரசாங்க அதிபர்,
திருக்கோணமலை மாவட்டம்.

கச்சேரி, திருக்கோணமலை,
1973 ம் ஆண்டு யூன் மீ 07 ந் உ.

7-456/1—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

**பிழை திருத்தம்**

திருக்கோணமலை மாவட்டத்தின் சேருவில பிரிவுக் காரியாதிகாரியின் பிரிவுக்குட்பட்ட கிராமசேவகர் பகுதிகளைத் திருத்தி அமைத்தல்

1971 ஒகத்து 13 ஆம் தேதிய 14,971 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியின் பகுதி I, பிரிவு (I) இல் மேற்போந்த விடயம் சம்பந்தமாகப் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் 1 (அ) பந்தி பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளதெனப் பொதுமக்கள் தகவலுக்காக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :

(அ) இலக்கம் 215—சேருவில கிராம சேவகர் பகுதியில் பின்வரும் குடியேற்றத் திட்டங்கள்/கிராமங்கள் அடங்கும் :

சேருவில, மங்களவெல் இளைஞர் திட்டம், உப்பூறல், சீனன்வெளி, அல்லை ஆர். பி. குடியேற்றத் திட்டம், புளொக் " சி " குடியேற்றத் திட்டம், மகிந்தபுர குடியேற்றத் திட்டம், செல்வநகர்.

திஸ்ஸ தேவேந்திரா,
அரசாங்க அதிபர்,
திருக்கோணமலை மாவட்டம்.

கச்சேரி,
திருக்கோணமலை,
1973 ம் ஆண்டு யூன் மீ 07 ந் உ.

7-456/2—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

## ஹம்பாந்தோட்டை மாவட்ட அம்பலாந்தோட்டை காரியாதிகாரி பிரிவில் மாடுகளுக்கு அடையாளமிடல்
## 1973 ம் வருடம்

1962.08.20 ந் திகதி இல. 13,268 கொண்ட வர்த்தமானிப் பத்திரிகையிலும் 1962.11.29 ந் திகதி இல. 13,406 கொண்ட வர்த்தமானிப் பத்திரிகை யிலும் பிரசுரிக்கப்பட்டுள்ள 1958 ன் 29 ம் இலக்க மிருக சட்டத்தின் 35 ம் பிரிவின் பிரகாரம் அமுலாக்கப்பட்ட 12 (ii) சட்டத்தின் கீழ் ஹம்பாந் தோட்டை மாவட்ட அம்பலாந்தோட்டை காரியாதிகாரி பிரிவில் மாடுகளுக்கு குறிபோடுதலுக்காக கீழ்க்காணும் அட்டவணையில் காணப்படும் இடங்களில் குறித்த திகதிக்கு நடத்தப்படும் என்பதை பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கிறேன்.

ஹம்பாந்தோட்டைக் கச்சேரி,
1973, ஜூன் மாதம் 29 ந் திகதி.

டீ. எச். ஜே. அபேகுணசேகர,
ஹம்பாந்தோட்டை மாவட்ட அரசாங்க அதிபர்.

அட்டவணை

| கிராமசேவகர் இல. | கிராமசேவகர் தொகுதி | அடையாளமிடும் இடம் | திகதி |
|---|---|---|---|
| 536 | உடயால | மெதயாலேயில் பெபிலதெனிய வத்த | 1973.08.10 |
| | | போகமுவில் அமைந்துள்ள பொல்மண்டிய வத்த | 1973.08.11 |
| | | பஹல குருவலேயில் அமைந்துள்ள வெவே வத்த | 1973.08.12 |
| 537 | ஹுருவெல | ஹுருவெல சந்தியில் | 1973.08.10 |
| | | நெடொல்போருவ சந்திக்கு பக்கத்தில் | 1973.08.11 |
| 538 | தஹஅமுன | கிராமசேவகர் காரியாலயத்தில் | 1973.08.21 |
| | | கொடவாய சந்திக்கு பக்கத்தில் | 1973.08.22 |
| | | தலம்போறுவ கூட்டுறவு கடை பக்கத்தில் | 1973.08.23 |
| | | தெபெலமுள்ள போகஹ பக்கத்தில் | 1973.08.24 |
| | | நிஹிலுவ அப்புஹாமி கடைக்கு பக்கத்தில் | 1973.08.25 |
| 539 | ஜூலமுல்ல | ஜூலமுல்ல ரொடீவாடியின் புளியன் மரத்திற்கு பக்கத்தில் | 1973.08.07 |
| | | ஐதுரையிலிருந்து சியமலாகஸ் விலவெவக்கு போகும் பாதை பக்கத்தில் | 1973.08.08 |
| | | ஹெலே கடை கல்கொரிய பக்கத்தில் | 1973.08.09 |
| | | ஹெலே கடை மையவாடிக்கு பக்கத்தில் | 1973.08.10 |
| | | கரகஹவெல பாழடைந்த கிணற்றுக்கு பக்கத்தில் | 1973.08.12 |
| | | ஐதுரைக்கு போகும் பாதையில் சந்திக்குப் பக்கத்தில் | 1973.08.15 |
| | | பலுகஹவல புளியன் மரத்திற்கு பகத்தில் | 1973.08.16 |
| | | தன்தெனிகம தேநீர் கடைக்கு பக்கத்தில் | 1973.08.17 |
| | | தெருன்கம பாஞ்சாலைக்கு பக்கத்தில் | 1973.08.19 |
| 540 | வகமுல்ல | அத்தனயால சமூபகாரைக்குபக்கத்தில் | 1973.08.22 |
| | | ஹீன்ஆர பாடசாலைக்கு பக்கத்தில் | 1973.08.23 |
| 541 | மெதகொட | கிராக சேவகர் காரியாலயத்தில் | 1973.07.15 |
| | | தியுல்கொட ஏழு ஏக்கர் கடைக்கு பக்கத்தில் | 1973.07.17 |
| | | திலுவன்கொட கண்டு மஹத்மயவுடைய கடை | 1973.07.18 |
| 542 | ஹீன்புன்ன | கஜுயககம சந்திக்கு பக்கத்தில் | 1973.08.04 |
| | | மதுலாதெனிய கெடமான்ன கெதர | 1973.08.05 |
| | | கடைக்கு பக்கத்தில் தோட்டத்தில் | 1973.08.06 |
| | | ஹீன்ஆர நிகுலஸ் சடைய தோட்டத்தில் | 1973.08.07 |
| 553 | வெலிபடன்வில | மொரகொட படபெதிராலகே கடைக்கு பக்கத்தில் | 1973.08.08 |
| | | நோனகம சந்திக்கு பக்கத்தில் | 1973.08.09 |
| | | கிராம சேவகர் காரியாலயத்திற்கு பக்கத்தில் | 1973.08.10 |
| 554 | தவலுவில | கிராம சேவகர் காரியாலயத்தில் | 1973.07.02 |
| | | மல்பெத்தாவ சமூபகார மந்திரைக்கு பக்கத்தில் | 1973.07.03, 04 |
| | | புஹூல்யாய பஸ்நாவ பக்கத்தில் | 1973.07.05, 06 |
| | | பெலிகாலகொட சந்தியில் | 1973.07.07 |
| | | பலுக்ஹகொடெல்ல D 3 வாய்க்கால் பக்கத்தில் | 1973.07.08 |
| 555 | லுனம | கிவுல பாடசாலை சந்தியில் | 1973.08.01 |
| | | லுனம பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு பக்கத்தில் | 1973.08.03 |
| 556 | பெமினியன்வில | கிராமசேவகர் காரியாலயத்தில் | 1973.07.29 |
| | | வலவேவத்த வெதமஹத்மயவுடைய கடையில் | 1973.07.30 |
| | | ரொடவல சமூபகாரைக்கு பக்கத்தில் | 1973.07.31 |
| | | அந்தரவீரகே வீட்டுக்கு பக்கத்தில் | 1973.08.01 |
| | | நுகசெவன | 1973.08.02 |
| 557 | எத்படுவ | எத்படுவ வெவ பக்கத்தில் | 1973.08.14 |
| | | பல்லரொடே கககாவ வத்த | 1973.08.16 |
| 559 | மினிஎதிலிய | பிட்டனியாய வெவ பக்கத்தில் | 1973.07.09 |
| | | அமுத்கம மெண்டிஸ் சில்வா வீட்டு பக்கத்தில் | 1973.07.10 |
| | | பலபொத கமுமஹத்தயாவுடைய காணியில் | 1973.07.11 |
| | | தெனிய சந்திக்கு பக்கத்தில் | 1973.07.12 |
| | | மினிஎதிலிகொட கரோலிஸுடைய வீட்டு பக்கத்தில் | 1973.07.13 |
| | | மெதரோதேகொட நுகேவத்த விதானமஹதாவுடைய காணி | 1973.07.15 |
| 561 | பல்லேகம | பட்டவலுவ கிராம கிணறுக்கு பக்கத்தில் | 1973.08.04 |
| | | கிரிபத்ஆர வயலுக்கு பக்கத்தில் | 1973.08.05 |
| | | மெதஎலிய வெவ பக்கத்தில் | 1973.08.06 |
| | | பல்லேகம ஹுன்கம வெவ பக்கத்தில் | 1973.08.07 |
| | | துடுவ கலபுவ பக்கத்தில் | 1973.08.08 |
| 562 | படஅத | படஅத கிராமசேவகர் காரியாலயத்திற்கு பக்கத்தில் | 1973.08.15 |
| 563 | ஹாதாகல | பாஞ்சாலை சந்தியில் | 1973.07.16 |
| | | விவேகர்ராம சந்தியில் | 1973.07.17 |
| | | கல்முள்ள மைதானத்தில் | 1973.07.18 |
| | | கலமெடிய டப்லிவ். ஜீ. பீடருடைய வீட்டு பக்கத்தில் | 1973.07.19 |

| கிராமசேவகர் இல. | கிராமசேவகர் தொகுதி | அடையாளமிடும் இடம் | திகதி |
|---|---|---|---|
| 564 | அமுனுகொலபெலெஸ்ஸ | இ. கி. மா. 438 இல் மையவாடி காணி | 1973.08.24 |
| | | இ. கி. மா. 452 ல் யகாகல கிராமசபை கிணறு பக்கத்தில் | 1973.08.26 |
| | | இ. கி. மா. 436 ல் குடவெவ கில்ம அரசாங்க காணியில் | 1973.08.28 |
| | | இ. கி. மா. 440 முளனகொட அரசாங்க காணியில் | 1973.08.30 |
| 567 | முலன | கிராமசேவகர் காரியாலயத்தில் | 1973.08.26 |
| | | திக்வெவ பக்கத்தில் | 1973.08.27 |
| | | மஹவெல பாடசாலைக்கு பக்கத்தில் | 1973.08.28 |
| | | கொபேலெஸ்ஸ ஆவாசைக்கு பக்கத்தில் | 1973.08.29 |
| | | உடரொடே பாஞ்சாலைக்கு பக்கத்தில் | 1973.08.30 |
| | | ஹதுன்கடுவ வெவ பக்கத்தில் | 1973.08.31 |
| 568 | மாமடல | கிராமசேவகர் காரியாலயத்தில் | 1973.08.10 |
| | | வலவேவத்தைக்கு திரும்பும் சந்தியில் | 1973.08.11 |
| | | ஜன்சகம அக்கரஅட கடை | 1973.08.12 |
| | | ஹெடவின்ன சந்திக்கு பக்கத்தில் | 1973.08.13 |
| 671 | தலாவ | கிராமசேவகர் காரியாலயத்தில் | 1973.08.07 |
| | | காரியமடித்த கொடே கடை | 1973.08.08 |
| | | சந்தைக்கு பக்கத்தில் | 1973.08.09 |
| 579 | சியபலாகொடே | வெ்டிய உடஹகெதர | 1973.07.16 |
| | | பரவகுபுக பொது சந்தைக்கு பக்கத்தில் | 1973.07.17 |
| | | கெமுனுபுர கூட்டுறவு கடைக்கு பக்கத்தில் | 1973.07.18 |
| | | சியபலாகடுவ பஹலவெவ பக்கத்தில் | 1973.07.19 |
| 580 | தபரெல்ல | கெந்தகெடிய ஆர். எ. அந்திரிஸ்ஹாமி வீட்டில் | 1973.08.27 |
| | | தபரெல்ல எல். கே. பீ. தியோனிஸுடைய வீடு | 1973.08.22,23 |
| | | இவுல தபலபெலெஸ்ஸ கே. எ. முதலிஹாமியுடைய வீடு | 1973.08.26 |
| | | ரத்மலவல, கச்சிகல வீ. பீ. சியதோரிஸுடைய வீடு | 1973.08.28 |
| 581 | அபேசேகரகம | சியபலாகஹகொரடுவ திரு. டி. ஜே. அபேசேகர வீட்டில் | 1973.07.15 |
| | | உஸ்வெவ எம். டி. தொன அந்தரயஸுடைய காணி | 1973.07.16 |
| | | எம். எ. சார்லிஸுடைய போகஹகாவ வத்த | 1973.07.17 |
| 582 | உஸ்வெவ | உஸ்வெவ தபால் கந்தோருக்கு பக்கத்தில் | 1973.08.02 |
| | | அமரதுங்கம சந்திக்கு பக்கத்தில் | 1973.08.06 |
| 583 | தெபொக்காவ | கிராமசேவகர் காரியாலயத்தில் | 1973.07.20 |
| | | சூரியபொகுன பாஞ்சாலைக்கு பக்கத்தில் | 1973.07.21 |
| 585 | வாதுருப்ப | கிராமசேவகர் காரியாலயத்தில் | 1973.08.12 |
| | | வாதுருப்ப ஆஸ்பத்திரிக்கு பக்கத்தில் | 1973.08.19 |
| 585 A | போலாஊ | கிராமசேவகர் காரியாலயத்தில் | 1973.08.14 |
| | | போலாஊ பாடசாலைக்கு பக்கத்தில் | 1973.08.15 |
| | | கரகஸ்ஆர சந்தியில் | 1973.08.16 |
| | | போகஹ சந்தியில் | 1973.08.17 |
| | | மெலேகொலனி சமூபகாரைக்கு பக்கத்தில் | 1973.08.18 |
| 589 | கொக்கல்ல | கிராமசேவகர் காரியாலயத்தில் | 1973.07.21 |
| | | கொக்கல்ல அரசாங்க பாடசாலைக்கு பக்கத்தில் | 1973.07.22 |

7–397—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

**அம்பாரை மாவட்டத்தைச் சேர்ந்த சம்மாந்துறைப் பிரிவுக் காரியாதிகாரியின் எல்லைக்குட்பட்ட கால் நடைகளுக்கு வர்க்க அடையாளம் இடும் அட்டவணை**

| கி.சே. இல. | கி. சே. வின் பிரிவு | குறிசுடும் இடம் | குறிசுடும் திகதி |
|---|---|---|---|
| 77 | சம்மாந்துறை தமிழ் குறிச்சி | கிராம சேவகரின் காரியாலயம் | 16. 7.73 |
| | | | 17. 7.73 |
| | | ஆடிமுட காலையடி | 18. 7.73 |
| | | | 19. 7.73 |
| | | சதக்கர் காளே | 20. 7.73 |
| | | | 21. 7.73 |
| | | கொல்லண்ட அரசடி | 23. 7.73 |
| | | | 24. 7.73 |
| | | | 26. 7.73 |
| 78 | சம்மாந்துறை 1 ம் குறிச்சி | கிராமசேவகரின் காரியாலயம் | 16. 7.73 |
| | | | 17. 7.73 |
| | | சதக்கர் காளே | 18. 7.73 |
| | | | 19. 7.73 |
| 78எ | சம்மாந்துறை 2 ம் குறிச்சி | கிராமசேவகரின் காரியாலயம் | 16. 7.73 |
| | | | 17. 7.73 |
| | | | 18. 7.73 |
| 79 | சம்மாந்துறை புளக் ஜே (கிழக்கு) | மஞ்சகேணி வட்டை | 16. 7.73 |
| | | | 17. 7.73 |
| | | பலாவடி வட்டை | 18. 7.73 |
| | | | 19. 7.73 |
| 79எ | சம்மாந்துறை புளக் ஜே (மேற்கு) | அசறப்பா வட்டை | 16. 7.73 |
| | | பனிச்சன்கேணி வட்டை | 17. 7.73 |
| | | | 18. 7.73 |
| | | | 19. 7.73 |

| கி.சே. இல. | கி. சே. வின் பிரிவு | குறிசுடும் இடம் | குறிசுடும் திகதி |
|---|---|---|---|
| 80 | சம்மாந்துறை 3 ம் குறிச்சி .. .. | ஆலிம் காலையடிக்குப் பக்கத்தில் .. .. | 16. 7.73 |
| | | சேவுகப் பற்றிக்குளம் .. .. | 17. 7.73 |
| | | | 18. 7.73 |
| | | கிராமசேவகரின் காரியாலயம் .. .. | 19. 7.73 |
| | | | 20. 7.73 |
| | | | 21. 7.73 |
| 81 | சம்மாந்துறை 4 ம் குறிச்சி .. .. | சேவுகப்பற்று வட்டை .. | 18. 7.73 |
| | | | 19. 7.73 |
| | | கிராமசேவகரின் காரியாலயம் .. .. | 20. 7.73 |
| | | | 21. 7.73 |
| 82 | மல்கம்பிட்டி .. | மாவடித்திடல், மல்கம்பிட்டி .. .. | 16. 7.73 |
| | | | 17. 7.73 |
| | | பட்டம்பிட்டி, மாவடித்திடல் .. .. | 18. 7.73 |
| | | | 19. 7.73 |
| 84 | இறக்காமம் .. .. | கட்டுவால் .. .. | 23. 7.73 |
| | | | 24. 7.73 |
| | | முனைப்பளம் .. .. | 27. 7.73 |
| | | | 28. 7.73 |
| | | முதலியார் வட்டை .. .. | 30. 7.73 |
| | | | 31. 7.73 |
| 85 | வரிப்பத்தான்சேனை .. .. | அச்சிமுகம்மது காலையடி .. .. .. | 16. 7.73 |
| | | | 17. 7.73 |
| | | முதலியார் வட்டை இஸ்மாலெவ்வை காலையடி .. .. | 18. 7.73 |
| | | | 19. 7.73 |
| | | கிராமசேவகரின் காரியாலயம் .. .. | 20. 7.73 |
| 89 | மல்வத்தை .. .. | கிராமசேவகரின் காரியாலயம் .. .. .. | 16. 7.73 |
| | | | 17. 7.73 |
| | | மல்லிகைத்தீவு உடையார் வளவு .. .. | 18. 7.73 |
| | | | 19. 7.73 |
| | | வளத்தாப்பிட்டி பாலையடி வளவு .. .. | 20. 7.73 |
| | | | 21. 7.73 |
| | | மஜீதுபுரம் கி. மு. ச. வளவு .. .. | 23. 7.73 |
| | | | 24. 7.73 |
| 90 | சொறிக்கல்முனை .. .. | கிராமசேவையாளரின் காரியாலயம் .. .. | 16. 7.73 |
| | | | 17. 7.73 |
| | | யுனிற் 6—புகையிலை பாம் .. .. | 18. 7.73 |
| | | | 19. 7.73 |
| | | விரச்சோலை அரசினர் பாடசாலைக்கு அருகில் .. .. | 20. 7.73 |
| | | | 21. 7.73 |
| 92 | வீரிமுனை .. .. | 1 ம் வட்டாரம் அரசமரத்தடி .. .. | 17. 7.73 |
| | | | 18. 7.73 |
| | | 1 ம் வட்டாரம் எம். அப்துல் காதரின் வளவு .. .. | 19. 7.73 |
| | | செம்மண் வட்டை வி. கி. பிரிவு .. .. | 20. 7.73 |
| | | | 21. 7.73 |
| 93 | சவளக்கடை .. | யுனிற் 4 வேப்படித்தோட்டம் .. .. | 16. 7.73 |
| | | | 17. 7.73 |
| | | யுனிற் 5 வீரத்திடல் .. .. | 18. 7.73 |
| | | | 19. 7.73 |
| | | சவளக்கடை வாகை மரச் சந்தி .. .. | 20. 7.73 |
| | | | 21. 7.73 |
| 94 | நாவிதன்வெளி .. .. | கிராமசேவகரின் காரியாலயம் .. .. | 16. 7.73 |
| | | | 17. 7.73 |
| | | கி. ச. காரியாலயம், நாவிதன்வெளி .. .. | 18. 7.73 |
| | | | 19. 7.73 |
| | | யுனிற் 15 ப. நோ. கூ. ச. வளவு .. .. | 20. 7.73 |
| | | | 21. 7.73 |
| | | யுனிற் 12 ப. நோ. கூ. ச. வளவு .. .. | 23. 7.73 |
| | | | 24. 7.73 |
| | | யுனிற் 11/11 வளவு .. | 26. 7.73 |
| | | | 27. 7.73 |
| 95 | அன்னமலை .. .. | அன்னமலை கே. சின்னத்துரையின் வளவு .. .. | 30. 7.73 |
| | | | 31. 7.73 |
| | | குடியிருப்புமுனை எஸ். சாமித்தம்பியின் வளவு .. .. | 1. 8.73 |
| | | | 2. 8.73 |
| | | யுனிற் 15 வேம்படி .. .. | 3. 8.73 |
| | | | 4. 8.73 |
| | | யுனிற் 13 அரசினர் பாடசாலை வளவுக்கு அருகில் .. | 6. 8.73 |
| | | | 7. 8.73 |

கச்சேரி, அம்பாறை,
1973 ம் ஆண்டு ஜூன் மீ 30 ந் உ.

டி. விஜயசிங்கா,
அரசாங்க அதிபர், அம்பாறை மாவட்டம்,

7-398—13.07.73 திகதிய வர்த்தமானி இல. 68

**யாத்திரிகைக்காகிய நிர்ணய விதிகள்**

*திரியாய் உற்சவம்—திருகோணமலை மாவட்டம், 1973*

மேற்குறித்த ஆலயத்திற்குரிய உற்சவம் இவ்வருடம் ஆவணி மாதம் 11 ஆந் திகதி தொடக்கம் ஆவணி மாதம் 13 ஆம் திகதிவரையும் நடைபெறும் என்பதை இவ்வுற்சவத்திற்கு தரிசனம் கொடுக்கும் யாத்திரிகைகட்கும் மற்றைய ஏனையோர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

அரசாங்க வர்த்தமானியில் 1967 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 12 ஆம் திகதிய 14,761/1 ஆம் இலக்கத்தின் பிரகாரம் பிரசுரித்த உருவாக்கப்பட்ட சட்டவித ஒழுங்கின்படி யாத்திரிகர்கள் அனைவரையும் மற்றைய ஏனையோர்களையும் ஒழுக வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சட்ட விதிகள் உற்சவகாலத்தில் அமுலில் இருக்குமென்பதும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

திஸ்ஸ தேவேந்திரா,
திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர்.

கச்சேரி, திருகோணமலை,
1973 ம் ஆண்டு யூலை மீ 02 ந் உ.

7–428—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

**யாத்திரிகைக்காகிய நிர்ணய விதிகள்**

**சேருவில உற்சவம்—திருகோணமலை மாவட்டம் 1973**

மேற்குறித்த ஆலயத்திற்குரிய உற்சவம் இவ்வருடம் ஆவணி மாதம் 06 ஆம் திகதி தொடக்கம் ஆவணி மாதம் 14 ஆம் திகதி வரையும் நடைபெறும் என்பதை இவ்வுற்சவத்திற்கு தரிசனம் கொடுக்கும் யாத்திரிகைகட்கும் மற்றைய ஏனையோர்கட்கும் அறிவிக்கப்படுகிறது.

அரசாங்க வர்த்தமானியில் 1967 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 12ஆம் திகதிய 14,761/1 ஆம் இலக்கத்தின் பிரகாரம் பிரசுரித்த உருவாக்கப்பட்ட சட்டவிதி ஒழுங்கின்படி யாத்திரிகர்கள் அனைவரையும் மற்றைய ஏனையோர்களையும் ஒழுகவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சட்டவிதிகள் உற்சவ காலத்தில் அமுலில் இருக்கும் என்பதும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

திஸ்ஸ தேவேந்திரா,
திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர்.

கச்சேரி, திருகோணமலை,
1973 ம் ஆண்டு யூலை மீ 02 ந் உ.

7–426—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை—1973

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| யூலை | .. | 6.7.73 | வெள்ளி | .. | 29.6.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 13.7.73 | வெள்ளி | .. | 6.7.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 20.7.73 | வெள்ளி | .. | 13.7.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 27.7.73 | வெள்ளி | .. | 20.7.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| ஓகத்து | .. | 3.8.73 | வெள்ளி | .. | 27.7.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 10.8.73 | வெள்ளி | .. | 3.8.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 17.8.73 | வெள்ளி | .. | 10.8.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 24.8.73 | வெள்ளி | .. | 17.8.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 31.8.73 | வெள்ளி | .. | 24.8.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| செத்தெம்பர் | .. | 7.9.73 | வெள்ளி | .. | 31.8.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 14.9.73 | வெள்ளி | .. | 7.9.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 21.9.73 | வெள்ளி | .. | 14.9.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 28.9.73 | வெள்ளி | .. | 21.9.73 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்.
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஒகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது